Registered as a Newspaper

பஸ் நிலையம் முன்பாக

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

கடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு பங்குனி மீ 21 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப். பிறை 22 (03 04 1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:117

விசேட ஆங்கில வகுப்புகள்
SHAKESPEARE SCHOOL
நீர்வேலி
ஆரம்பம்: 9-4-1986
School Leavers Only
திங்கள்-புதன் நாட்களில்
மு. ப. 9 — 12 வரை
தொடர்பு:
த. ந. பஞ்சாட்சரம்

ஆரம்பம்: 9-4-1986
நீர்வேலியில்
விசேட ஆங்கில போதனை
கற்கை நெறிகள்:
G. C. E. O/L
N. C. E. Nov. 86
SPECIAL ENGLISH
TOFEL/ELT

# கொக்காவிலில் நேற்று நிலக்கண்ணிவெடி; நேரடி மோதல்

## 1 அதிகாரி 9 சிப்பாய்கள் பலி; போராளிகளும் மூவர் மரணம் ராணுவ டிரக்குகள் இரண்டும் சேதம்

—அலுவலகச் செய்தியாளர் பி. வனிதராஜன்—

யாழ்ப்பாணம், ஏப். 3

முறிகண்டிக்கு அருகில் பதினெட்டாம் போர் என்னும் இடத்தில் (கொக்காவிலில்) நேற்றுக் காலை நிலக்கண்ணி ஒன்று வெடித்ததில் டிரக் ஒன்று சுக்கு நூறாகியது. ஓர் இராணுவ உயர் அதிகாரி உட்பட பத்து சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். பதினைந்து சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

இதையடுத்து நிகழ்ந்த நேரடி மோதலில் மூன்று போராளிகள் கொலையுண்டனர்.

இச்சம்பவம் பற்றிச் சொல்லப்படுவதாவது:-

நேற்றுக் காலை கிளிநொச்சி ஆயுதப்படை முகாமிலிருந்து கொக்காவில் இராணுவமுகாமை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இராணுவ வண்டித் தொடர் ஒன்று பதினெட்டாம் போர் என்னும் இடத்தில் பெரும் நிலக்கண்ணி வெடி ஒன்றில் சிக்கியது.

கண்ணி வெடியில் சிக்கிய இரண்டு டிரக்குகளில் ஒன்று பல அடி உயரத்திற்கு மேலே தூக்கி எறியப்பட்டு கீழே விழுந்து சுக்கு நூறாகியது. மற்றையது பலத்த சேதமடைந்தது.

ஓர் இராணுவ உயர் அதிகாரி உட்பட 7 சிப்பாய்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். 16 சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

இந்தப் 16 பேரில் இரண்டு பேர் பின்னர் மருத்துவமனையில் உயிரிழந்தார்கள் என்று பிந்தி வந்த செய்திகள் தெரிவித்தன.

நிலக்கண்ணி வெடித்ததையடுத்து அப்பகுதியில் மறைந்திருந்த போராளிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேரடி மோதல் நிகழ்ந்தது

இருதரப்பிலும் ரொக்கட் லோஞ்சர் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம், குண்டு வீச்சு ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் மூன்று போராளிகள் இறந்தனர். இராணுவத் தரப்பிலும் சிலர் இறந்தும் பலர் காயப்பட்டும் இருக்கலாம் என அஞ்சப்பட்டது.

### ஹெலிக்கொப்டர்கள்

நேரடி மோதல் நடைபெற்ற இடத்திற்குப் பின்னர் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் விரைந்தன.

நிலக்கண்ணி வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில் இருந்த சிப்பாய்கள் ஒரு ஹெலிக்கொப்டரில் ஏற்றப்பட்டு அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சின்னாபின்னமாகிப் போனதாகக் கூறப்படும் சிப்பாய்களின் சடலங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு கொக்காவில் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டன.

படுகாயமடைந்த நிலையில் அநுராதபுரம் ஆஸ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### காயமடைந்த மூவர்

பலாலி, ஏப். 3

நேற்று சேந்தான்குளம் கருகம்பானை, இளவாலை, விளான் பகுதிகளில் ஹெலிக்கொப்டர் தாக்குதலால் காயமடைந்து தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களது விவரம்:-

அருளானந்தம் மகேந்திரம் (37 வயது) வலது கையில் 'ஷெல்' தாக்குதல்.

செல்லர் செல்லப்பா (56வயது) இடது காலில் 'ஷெல்' தாக்குதல்.

முருகேசு வீரசேகரம் (28 வயது) இடுப்பின் கீழ் பின்பக்கத்தில் 'ஷெல்' தாக்குதல்.

### மட்டுநகரில் குண்டுவெடிப்பு

மட்டக்களப்பு, ஏப். 3

மட்டக்களப்பு நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 9 மணியளவில் குண்டுவெடிப்புச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன.

# சேந்தான்குளம் இளவாலை, விளான் பகுதிகளில் வானச் சூடு!

## மூவர் மரணம்; பலர் காயம்

—பலாலிச் செய்தியாளர்—

பலாலி, ஏப். 3

இளவாலை, சேந்தான்குளம், கலட்டி, கருகம்பானை, விளான் ஆகிய இடங்களில் நேற்று இடம்பெற்ற நான்கு மணிநேர ஹெலிக்கொப்டர் தாக்குதலில் மூவர் மரணம் அடைந்தனர் பலர் காயமடைந்தனர். வீடுகள் சேதமடைந்தன.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

நேற்றுக் காலை 11 30 மணி அளவில் காபர் வியூ ஹோட்டலில் இருந்து சிப்பாய்கள் வெளியே வந்தனர்.

மாதகல் கடற்கரைக்குச் செல்லும் வழியால் கவச வாகனங்கள் சகிதம் நடைபவனியாக அவர்கள் வந்தபோது அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

அப்போது போராளிகள் சிப்பாய்களை எதிர்க்க முற்பட்டனர்.

அந்நேரம் பலாலியில் இருந்து வந்த ஹெலிக்கொப்டர் ஒன்று அப்பகுதிக்கு வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. 'ஷெல்' தாக்குதலும் மேற்கொள்ளப் பட்டது.

இத்தாக்குதலின்போது போராளிகள் எதிர்த் தாக்குதல்களை மேற்கொண்டனர். சுமார் ஒரு மணிநேரமாக சுட்டுக் கொண்டும் 'ஷெல்' வீசிக்கொண்டுமிருந்த ஹெலிக்கொப்டர் பின்பு பலாலிக்குத் திரும்பியது.

இராணுவத்தினரும் முகாமிற்குத் திரும்பினர்.

### வான்மீது சூடு

பின்பு இரண்டாம் முறை பகல் 1-00 மணியளவில் கறுப்பு நிற ஹெலிக்கொப்டர் ஒன்றும், பச்சைநிற ஹெலிக்கொப்டர் ஒன்றும் அரை மணிக்கொன்றாக இளவாலைப் பக்கம் நோக்கி வந்தன.

சேந்தான்குளப் பகுதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வல்வெட்டித்துறையில் நள்ளிரவுத் தாக்குதல்

## மக்கள் கோயில்களில் தஞ்சம் நால்வர் காயம், வீடுகள் சேதம்

வல்வெட்டித்துறை, ஏப். 3

வல்வெட்டித்துறையில் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு நடந்த அசம்பாவித சம்பவங்களை அடுத்து பலர் கோயில்களில் தஞ்சம் அடைந்தனர். நால்வர் காயம் அடைந்தனர். வீடுகள் சேதம் அடைந்தன.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;

செவ்வாய்க்கிழமை இரவு சுமார் 11-30 மணி இருக்கும். வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து கடற்கரையோரத்தால் வெளியே வர சிப்பாய்கள் எத்தனித்தனர்.

அப்பொழுது போராளிகள் கைக்குண்டுகளை வெடிக்க வைத்தனர். துப்பாக்கியாலும் சுட்டனர். சிப்பாய்களும் திருப்பித் தாக்கினர். பின்பு சிப்பாய்கள் முகாமுக்குத் திரும்பிச் சென்றனர்.

பின்பு நள்ளிரவு சுமார் 1-30 மணி அளவில் திடீரென பெரிய சத்தத்துடன் முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்கள் ஆரம்பமாகின. அதைத் தொடர்ந்து சரமாரியாகத் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டன.

கடலிலிருந்தும் தொடர்ச்சியாகப் பீரங்கி வேட்டுக்கள் கரையை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சிப்பாய்களுக்கு மீன் பிடித்து கொடுத்தவர்கள் !

வல்வெட்டித்துறை, ஏப் 3

கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் இருவர் ஆயுதப் படை சிப்பாய்களிடம் அகப்பட்டு இரு தினங்கள் சிப்பாய்களுக்கு மீன் பிடித்துக் கொடுத்தனர்.

இச் சம்பவம் வட பகுதியின் கரையோரமாக உள்ள ஆயுதப்படை முகாம் ஒன்றில் நடந்தது.

கடலில் இருந்த மீனவர்கள் இருவரையும் கூட்டி வந்த சிப்பாய்கள் தாம் வைத்திருந்த வலைகளை அவர்களிடம் கொடுத்தனர்.

மீன் பிடித்துத் தருமாறு மீனவர்களை நிர்ப்பந்தித்தனர்.

இரு தினங்கள் முகாமில் தங்கி இருந்து மீனவர்கள் சிப்பாய்களுக்கு மீன் பிடித்துக் கொடுத்தனர்.

தம்முடன் மேலும் சில நாட்கள் தங்கி இருந்து மீன் பிடித்துத் தரும்படி சிப்பாய்கள் கேட்டனராம்.

தமது வீட்டார் தேடுவார்கள் என்று கூறிய மீனவர்கள் இருவரும் ஒருவாறு தமது வீடு வந்து சேர்ந்தனராம்.

### கடற்கரைக்கு சென்ற மீனவருக்கு சூடு!

பலாலி, ஏப். 3

கீரிமலை விஷ்ணு ஆலயத்துக்கு அருகில் உள்ள கடற்கரைக்குச் சென்ற மீனவருக்கும் துப்பாக்கிச் சூடு விழுந்தது.

28வயதான கதிரேசன் தவம் என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளானவர்.

வலதுகை, புஜம் ஆகியவற்றில் காயமடைந்த அந்த நபர் தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

### ★ யாழ் சுருட்டுக்கு படி ஏறி இறங்குகிறார்கள்

கண்டி ஏப். 3

யாழ்ப்பாணச் சுருட்டுக்கு கண்டிப் பகுதிகளின் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணச் சுருட்டை விரும்பிப் புகைக்கும் பலர், அச்சுருட்டைத்தேடி கடை கடையாக ஏறி இறங்குகின்றனராம்.

வன்செயல்கள் காரணமாக யாழ்ப்பாணச் சுருட்டு வருவது தடைப்பட்டுள்ளது என்று வாடிக்கையாளர்களுக்குக் கடைக்காரர்கள் கூறுகின்றனர்.

### சுபநேரம்

03- 04- 1986
வியாழக்கிழமை
சுபநேரம்:
7.40 முதல் 9.10 வரை
ராகுகாலம்:
1.40 முதல் 3 10 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
நவமி பி. ப 2.11 வரை

## தந்தை: முகாமில்; தாய்: எமனுலகில் குழந்தையோ மற்றவர் கையில்

### தமிழ்க் குடும்பத்தின் பரிதாபக் கதை

கல்முனை, ஏப். 3

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு சில நாட்களுக்கு முன்னர் மட்டக்களப்புக்குப் புறப்பட்ட பஸ்ஸில் தமிழ்க் குடும்பம் ஒன்றும் பிரயாணஞ் செய்தது.

இளம் கணவர். மனைவியோ நிறைமாதக் கர்ப்பிணி

வவுனியாவிற்கு அருகில் உள்ள தடைமுகாம் ஒன்றில் கணவர் இறக்கப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

நிறைமாதக் கர்ப்பிணியான மனைவியோ தன்னந் தனியே பிரயாணத்தைத் தொடர்ந்தார்.

சிங்கள ஊர் ஒன்றை நெருங்கியதும் மனைவிக்கு பிரசவ நோவு கண்டது.

அந்த ஊரில் உள்ள ஆஸ்பத்திரியில் மனைவி அனுமதிக்கப்பட்டார். குழந்தை பிறந்ததும், மனைவி இறந்துவிட்டார்.

குழந்தை மட்டும் தப்பியது.

அந்த பஸ்ஸில் பிரயாணம் செய்த இன்னொரு கல்முனைப் பெண், குழந்தையை மட்டும் எடுத்துக்கொண்டு அந்த பஸ்ஸில் கல்முனை வந்து சேர்ந்தார்.

அந்தக் குழந்தை இப்போது கல்முனையில் வாடி வீட்டு வீதியில் வசிக்கும் திருமதி அமரசிங்கத்தின் பொறுப்பில் உள்ளது.

தந்தை, தடுப்பு முகாமில.

தாய், சிங்கள ஊரில் உள்ள ஆஸ்பத்திரியில் பிணமாக.

குழந்தையோ, கல்முனையில் யாரோ ஒருவரின் வீட்டில்.

எப்படி இருக்கிறது, அத் தமிழ்க் குடும்பத்தின் பரிதாப கதை!

## போராளிகளைத் தேடி படையினர் கடும் தேடுதல்

யாழ்ப்பாணம், ஏப். 3

கொக்காவிலில் நேற்று நடைபெற்ற கண்ணிவெடித் தாக்குதலை அடுத்து அப் பகுதி சுற்றிவளைத்து சல்லடை போட்டுத் தேடப்பட்டது.

நூற்றுக்கணக்கான சீருடையினர் கிளிநொச்சி எல்லையிலிருந்து சம்பவம் நடந்த பதினெட்டாம் போர், கொக்காவில் பகுதியை சுற்றி வளைத்து தேடினர்கள்.

கண்ணிவெடிச் சம்பவத்தையடுத்து யாழ் நகர் — கொழும்பு சேவையில் ஈடுபட்டிருந்த தனியார் பஸ்கள், இ.போ.ச. பஸ்கள் அனைத்தும் அனுராதபுரம், மதவாச்சி ஆகிய இடங்களில் உள்ள முகாம்களில் வழிமறிக்கப்பட்டன.

இந்த பஸ்களில் பயணிகளுடன் படையினரும் ஏறினர். பஸ் வண்டிகள் முன்னுக்கும் பின்னுக்கும் வர கவச வண்டிகள் சகிதம் படைவீரர்கள் கண்ணிவெடிச் சம்பவம் நிகழ்ந்த இடத்தைச் சென்றடைந்தனர்.

அங்கு தேடுதல் நடைபெற்றது.

அப்பகுதியில் வைத்து சில வாகனங்களில் வந்தவர்கள் தாக்கப்பட்டனர் என்றும் இரண்டு லொறிகள் தீக்கிரையாக்கப்பட்டன என்றும் சொல்லப்படுகிறது.

ஈ. எல். எவ். வான் ஒன்றும் லொறி ஒன்றும் குடைசாய்ந்தனவாம்.

### ஷெல் தாக்கு: காயமடைந்த பெண் மரணம்

நல்லூர், ஏப். 3

ஷெல் தாக்குதலால் காயமடைந்து இருந்த பெண் ஒருவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில்

(4- ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முனி



ஓம், முந்தி ஒரு காலத்திலை சுருட்டாலை எங்கடை ஆக்கள் உழைச்ச காசெல்லாத்தையும் சுருட்டினவை எல்லே. அதுக்கு வட்டியாய் இப்ப படி ஏறி அலையினம் போலை......!

## பல்கலைக்கழக அனுமதி: விண்ணப்பப் படிவம் இங்கே பெற வசதி

கொழும்பு, ஏப். 3

பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்குத் தகுதி பெற்ற யாழ்ப்பாணப் பகுதி மாணவர்கள், உரிய விண்ணப்பப் படிவத்தை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இத்தகவலை உயர் கல்வி அமைச்சின் பல்கலைக்கழக மானியக் கமிஷன் நேற்று வெளியிட்டது.

ஜி. ஸி. ஈ. உயர்தரப் பரீட்சையில் குறிப்பிட்ட கூட்டு மொத்தப் புள்ளிகளைப் பெற்றவர்கள் மானியக் கமிஷனுக்கு இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் உரிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆனால் அந்தப் படிவம் யாழ்ப்பாணப் பகுதிக்கு நேற்றுவரை வந்து சேரவில்லை.

இந்தப் படிவங்கள் இனி எப்போது கிடைக்கும், கிடைத்தாலும் பத்தாம் திகதிக்கு முன்னர் போய்ச் சேரக்கூடியதாக அவற்றை அனுப்ப முடியுமா என மாணவர்கள் கவலை தெரிவித்தனர்.

குறிப்பிட்ட விண்ணப்பப் படிவங்களை யாழ் பல்கலைக்கழகத்தில் பெறலாம் என அறிவிக்கப்பட்ட போதிலும், விண்ணப்ப முடிவு திகதியை நீடிப்பது குறித்து எவ்வித அறிவிப்பும் இல்லை.

## போராளிகளுக்கு ஆதரவான லண்டன் தமிழர்கள் மீது கடும் நடவடிக்கை எடுங்கள்

### பிரிட்டனிடம் இலங்கை அரசு கோரிக்கை

லண்டன், ஏப். 2

தமிழ் போராளிகளுக்கு உதவிவரும் பிரிட்டன் வாழ் தமிழ் மக்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கும்படி இலங்கை அரசு பிரிட்டனிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இலங்கைக்கு வெளியே- சென்னைக்கு அடுத்ததாக- தமிழ் போராளிகள் மும்முரமாக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் இடம் லண்டன் தான்.

இந்திய தீவிரவாதிகள் குறித்து கடும் நடவடிக்கை எடுக்க பிரிட்டன் உறுதியளித்திருப்பது போல-

இலங்கைத் தீவிரவாதிகள் விடயத்திலும் பிரிட்டன் செயற்பட வேண்டும்.

- இப்படி இலங்கை அரசு பிரிட்டனைக் கேட்டிருக்கிறது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு ஆயுதக் குறைப்பே சமாதானத்துக்கு வழி

## அழுத்திக் கூறுகிறார் பாரதப் பிரதமர்

புதுடில்லி, ஏப். 2

உலக சமாதானத்துக்கு அணு ஆயுதக் குறைப்புத்தான் ஒரே வழி.

இவ்வாறு பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி அழுத்திக் கூறியுள்ளார்.

சமாதான மேம்பாட்டிற்கான உலக மகளிர் பாராளுமன்ற உறுப்பினர்களின் 2வது மாநாட்டை ராஜீவ் டில்லியில் துவக்கி வைத்து உரையாற்றினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

சமாதானத்தைக் கட்டி வளர்ப்பதற்கு அணு ஆயுத ஆயுதங்களைப் படிப்படியாக அகற்றுவதே ஆக்கபூர்வமான வழியாகும்.

மனித குலம் உயிர் பிழைத்திருப்பதற்கு இப்பொழுது அச்சுறுத்தல்கள் பல சூழ்ந்துள்ளன.

பேரழிவை விளைவிக்கும் ஆயுதங்களைக் குவிப்பதில்தான் வல்லரசுகள் அக்கறை அதிகம் காட்டுகின்றன. பெருந்தொகையான நிதியை இதற்குச் செலவிட்டும் வருகின்றன.

சமாதான நல்லெண்ணத்துடன் ஆயுதப் போட்டியை நிறுத்த வல்லரசுகள் அரசியல் ரீதியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். இது அவசரமானதும்; அவசியமானதும் ஆகும். இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

சமாதானத்தை வளர்த்தெடுப்பதில் உலக மகளிர் அதிக அளவுக்கு அக்கறை காட்டுவதாக இளைஞர் மகளிர் நலத்துறை ஸ்டேட் மந்திரி திருமதி மார்கிரட் ஆல்வா தெரிவித்தார்.

20 நாடுகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர்.

சோவியத் ரஷ்யாவில் இருந்து வாலன்ரீனா தெறஸ்கோவா பங்கு பற்றுகிறார்.

விண்வெளியில் முதன் முதலாக வெற்றிப் பயணம் மேற்கொண்ட வீரப் பெண்மணி இவர் என்பது குறிப்பிடத் தக்கது.

## ஒட்டேகா கண்டனம்

மெனகுவா, ஏப். 2

நிக்கராகுவாவுக்கும் ஹொண்டுராஸுக்கும் இடையில் பதற்ற சூழ்நிலையை உருவாக்குவதில் அமெரிக்கா முனைந்து நிற்கிறது,

இவ்வாறு நிக்கராகுவா ஜனாதிபதி ஒட்டேகா கண்டித்துள்ளார்.

## வெளி உலகில்

## அமைதி, சமாதானத்துக்கு அமெரிக்க தளம் வேண்டும்

### சிங்கப்பூர் வெளிநாட்டமைச்சர் தனபாலன் கருத்து

மணிலா, ஏப்ரல். 2

ஆசியப் பிராந்தியத்தில் சமாதான நல்லுறவுகள் வலுவடைய அமெரிக்க தளங்கள் இப்பகுதியில் இருப்பது அவசியமானதாகும்.

இவ்வாறு சிங்கப்பூர் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் சுப்பையா தனபாலன் கருத்து வெளியிட்டுள்ளார்.

பிலிப்பீன்ஸுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தனபாலன் ஜனாதிபதி கொருசன் அக்கினோவை சந்தித்த பின்பே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆசியான் கூட்டமைப்பின் அங்கத்துவ நாடு சிங்கப்பூர். அமெரிக்க நலன்களில் அக்கறை கொண்ட அமைப்பு இது என விமர்சிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத் தக்கதாகும்.

## பிலிப்பீன்ஸ்களை எடுப்பு தொடர்ந்து நடக்கிறது

### 20 இராணுவ ஜெனரல்களுக்கு ஜனாதிபதி அக்கியூனோ கலிதா

மணிலா, ஏப் 2

பிலிப்பீன்ஸ் இராணுவத்துக்குள் பாரிய மாற்றங்கள் நிகழ இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதற்கு முன்னோடியாக ஜனாதிபதி திருமதி அக்கியூனோ 20 இராணுவ ஜெனரல்களையும் 90 இடைநிலை இராணுவ உத்தியோகத்தர்களையும் பதவிகளிலிருந்து ஓய்வு பெறுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

பிலிப்பீன்ஸில் பல மட்டங்களில் மார்க்கோஸ் ஆதரவு இரகசியப் பிரிவுகளின் கெடுபிடிகள் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே திருமதி அக்கியூனோவுக்கு எதிராக வழக்கொன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் போவதாக மார்க்கோஸ் ஆதரவுப் பிரிவைச் சேர்ந்த சிலர் ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

புதிய அரசமைப்பு பிலிப்பீன்ஸில் பிரகடனப்படுத்தப்பட்டதற்கும் பழைய தேசிய சபை கலைக்கப்பட்டதற்கும் எதிராகவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட இருப்பதாக மேலும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## புன்னகையரசி விஜயாவுக்கு ஏற்பட்ட திகில் அனுபவம்

தமிழ்த் திரையுலகில் நீண்டகாலமாக ஒளி வீசிவரும் தாரகை புன்னகை அரசி கே. ஆர். விஜயா.

அவர் தனது வாழ்க்கையில் ஏற்பட்ட மறக்க முடியாத ஓர் அனுபவத்தைக் கூறுகிறார்:

'என்னுடைய கணவர் 'பிளேன்' வைத்திருந்தது எல்லோருக்கும் தெரியும். ஆனால் நாங்கள் மீன்பிடிப் படகு வைத்திருந்தது பலருக்குத் தெரியாது.

படகில் போய் மீன் பிடித்துக்கொண்டு வர வேண்டும் என்பது எனது நீண்டநாள் ஆசை. அவரிடம் எனது ஆசையைக் கூறினேன். அவரோ விரும்பவில்லை.

நானோ ஒரே பிடிவாதமாகப் போகவேண்டும் என்று அடம்பிடித்து ஒரு நாளையும் முடிவுசெய்தோம்.

அந்த நாளும் வந்தது. காலையில் பத்திரிகையை வாசித்தேன். அதில் 'அலைச்சல்' என்று நான் பலனில் இருந்தது, வானிலை அறிக்கையில் 'மழை வரும்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அதை எல்லாம் சட்டைசெய்யாமல் நாங்கள் பதினைந்து பேர் சேர்ந்து பயணத்தை ஆரம்பித்தோம்.

கடலில் போய்க் கொண்டிருக்கும் போது திடீர் என்று மழை பெய்யத் தொடங்கியது.

ரோட்டில் இருப்பதைப்போன்று பயங்கரமான மேடு, பள்ளங்கள் தெரிந்தன. படகைக் காற்று தூக்கித் தூக்கிப் போட்டது. வாழ்க்கை இன்றுடன் முடிந்துவிட்டது என்று நினைத்தேன்.

என்கணவர், 'அப்பவே சொன்னேன் கேட்டியா' அதுதான் இப்ப படாதபாடு படுகிறாய்' என்று கேலி செய்யத் தொடங்கி விட்டார்.

நான் வேண்டாத தெய்வம் இல்லை. எப்படியாவது வீடு போய்ச் சேரவேண்டும் என்று பிரார்த்தித்தேன்.

ஒருவாறு மழை, காற்று எல்லாம் அடங்கிவிட, வீடு வந்து சேர்ந்தோம்.

அந்தத் திகில் அனுபவத்தை இன்னும் என்னால் மறக்க முடியாமல் இருக்கிறது' என்றார்.

தினசரி சினிமா

## பங்களாதேஷ் படகு விபத்து

லண்டன், ஏப். 3

பங்களாதேஷின் சிட்டாய் நகரிற்கு அருகில் பயணிகள் படகு ஒன்று நீரில் மூழ்கியதில் 20 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 20 பேர் கடலில் மூழ்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

71 பேரை ஏற்றிச் செல்லக்கூடிய பயணிகள் படகில் விபத்து நடந்த போது 200 பேர்வரை இருந்ததாக கண்கண்ட சாட்சிகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடந்த செவ்வாய் இரவு வீசிய கடும் சூறாவளியினால் டாக்காவில் 2 பேரும் குல்லாவில் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

புயலினால் நகரில் பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

## சுமுகமான நிலையில் சுவிஸ் - பாரத உறவு

### பாரதம் வந்துள்ள சுவிட்சர்லாந்து வெளியுறவு அமைச்சர் கூறுகிறார்

புதுடில்லி, ஏப் 2

பாரதத்துக்கும் சுவிட்சர்லாந்துக்கும் இடையேயான உறவு என்றும் சுமுகமாகவே இருக்கிறது.

இவ்வாறு பாரதம் வந்துள்ள சுவிட்சர்லாந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் குறிப்பிட்டார்.

புதுடில்லி விமான நிலையத்தில் வைத்து பாரத வெளியுறவு அமைச்சரின் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையிலேயே அமைச்சர் பியர். ஒ-வெயர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தொடர்ந்துபேசுகையில்;

பொருளாதார, வர்த்தக தொழில்துறை உறவுகளை பாரதத்துடன் விருத்திசெய்ய சுவிட்சலாந்து விரும்புகிறது.

இதுதொடர்பான பேச்சுவார்த்தைகளும் மற்றும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றார்.

## 'சார்க்' அமைப்பின் ஆலோசனை மாநாடு

### இஸ்லாமாபாத்தில் ஏற்பாடு

இஸ்லாமாபாத், ஏப்ரல் 2

தென் ஆசிய நாடுகள் ஒத்துழைப்பு அமைப்பின் மந்திரிகள் நிலை மாநாடு பாகிஸ்தானில் கூட்டப்பட இருக்கிறது.

இஸ்லாமாபாத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டுக்கு பாகிஸ்தான் பிரதமர் ஜுனெஜோ அழைப்பு விடுத்துள்ளார்.

புதிய பொருளாதார முறைகளுக்கு ஏற்ற திட்டங்கள் பற்றி இந்த மாநாட்டில் விவாதிக்கப்படுமென நம்பப்படுகிறது.

நாடுகளின் பொருளாதார வர்த்தக குழுக்களுக்கு அந்தந்த நாடுகளின் சம்பந்தப்பட்ட துறை அமைச்சரே தலைமை வகிப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

---

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## கூட்டணிக்கு பயப்படும் அரசு, தாதிமார் சங்கத்தில் கை வைத்திருக்கிறது --அனுரா

கொழும்பு ஏப். 2

நாட்டைப் பிரிக்கக் கோரும் தமிழர் விடுதலைக் கூட்டணியை தடை செய்வதற்கு அரசாங்கம் பயப்படுகின்றது. ஆனால் சம்பள அதிகரிப்பைக் கோரியதற்காக தாதிமார் சங்கத்தை அரசு தடை செய்துள்ளது.

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் தாதிமார் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும்.

தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு கேட்டவுடன் கொடுக்கப்படுகின்றது.

தாதிமார் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானது.

தாதிமார் வேலைநிறுத்தத்தை முறியடிக்கக் குண்டர்களை உபயோகிப்பது மனிதாபிமானமற்றது.

அப்பாவி நோயாளிகளைக் காப்பாற்றவாவது அரசாங்கம் தாதிமார் வேலைநிறுத்தத்துக்கு தீர்வு காணவேண்டும்.

தாதிமார் சங்கத் தலைவராக அமைச்சர் தொண்டமான் இருந்திருந்தால் வேலை நிறுத்தப் பிரச்சினைக்கு அரசு தீர்வு கண்டு இருக்கும்.

இப்படி திரு. அனுரா பண்டாரநாயக்கா அறிக்கையில் தெரிவித்தார்.

## விசேஷ சேவையாளர் பரீட்சையில் சித்தி

கிளிநொச்சி, ஏப். 3

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து விசேஷ சேவையாளர்களுக்கான தகுதிகாண் பரீட்சையில் கலந்துகொண்ட ஆறு பேரில் நால்வர் சித்தியடைந்துள்ளனர்.

சித்தி எய்தியோர் விவரம்: பொ.யோகேந்திரன், ஐ.சிவராசா, க.ஞானேஸ்வரன், எஸ். கண்ணப்பமூர்த்தி.

## சுருவில் பிரதானவீதி மின் ஒளி

ஊர்காவற்றுறை, ஏப்ரல் 3

ஊர்காவற்றுறை பகுதியைச் சேர்ந்த சுருவில் கிராமத்தின் பிரதான வீதியில் வீதி வெளிச்சங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

நீண்டகாலமாக இருளில் மூழ்கியிருந்த இவ்வீதிக்கான மின்சார இணைப்பை சுருவில் இளைஞர் சங்கத்தினர் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் உப அலுவலகங்களில் ஒன்றான நாரந்தனை அலுவலகத்தினால் நிர்வகிக்கப்பட்டுவரும் மின்சார திட்டத்திலேயே இவ்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

## தந்தை செல்வாவின் உறுதி எமக்கும் வேண்டும்

### வண. சர்வானந்தன்

காங்கேசன்துறை, ஏப்.3

இன்னல்கள் பல வந்த போதும் தாம் தொடங்கிய அகிம்சை வழிப் போராட்டத்திலிருந்து பின் வாங்காமல் தொடர்ந்து போராடியவர் தந்தை செல்வா.

அந்த உறுதியான மனோநிலை எமக்கும் ஏற்பட வேண்டும். மார்க்கம் எதுவானாலும் அந்த வழியில் நாம் உறுதியுடன் செயல்பட வேண்டும்.

தெல்லிப்பளை தேவாலயத்தில் இடம்பெற்ற தந்தை செல்வாவின் 88 ஆவது பிறந்த தினத்தையொட்டிய விசேஷ ஆராதனையில் கலந்து உரையாற்றிய யாழ். சென். ஜோன்ஸ் தேவாலய வண. ஜே. சர்வானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

வண. பிரேமதாசன் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

வண. சர்வானந்தன் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

எந்த மக்களானாலும் தனது நாட்டை தனது இனத்தை நேசிப்பவர்களாக இருக்க வேண்டும்.

எமது மக்களுக்கு வழிகாட்டியபெரியோர்களில் தந்தை செல்வா மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்.

அவர் ஆசையை நிறைவேற்றும் பணியில் நாம் முழுமுச்சுடன் ஈடுபடுவதே அவருக்கு செய்யும் கைம்மாறாகும்.

இப்படி அவர் கூறினார்.

வைபவத்தில் தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத் தலைவர். திரு. சி. சிவமகாராசா, நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தலைவர், திரு. பொ. கனகசபாபதி, யாழ் மாவட்ட சபை முன்னாள் உறுப்பினர் திரு. இராஜேந்திரம், வணபிதா டி. ஜே. அம்பலவாணர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## மல்லாகம் இளைஞர் கழக பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல். 3

தேசிய இளைஞர் சேவை மன்ற மல்லாகம் இளைஞர் கழகத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 6.4.86 காலை, மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

நிஸ்கோ பொதுமுகாமையாளர் செல்வி எஸ். மகேஸ்வரி, யாழ் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திரு. ச. கார்த்தி, வலி - வடக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. கே. ஏ. கனகேந்திரம், மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் கூட்டத்தில் கலந்துகொள்வர்.

## அபிவிருத்தி குழு

பருத்தித்துறை, ஏப். 3

யாழ்ப்பாண அபிவிருத்திச் சபை புலோலி உப அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதியை அபிவிருத்தி செய்ய அபிவிருத்திக்குழுவொன்று தெரிவு செய்யப்படும்.

யாழ் அபிவிருத்திச் சபை புலோலி உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு பெ. கனகசபாபதி இதனைத் தெரிவித்தார்.

## இமையாணனில் தையல் பயிற்சி நிலையம்

பருத்தித்துறை, ஏப். 3

தொழிற் திணைக்களத்தினால் நடத்தப்படும் தையற்பயிற்சி நிலையம் உடுப்பிட்டி இமையாணனில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் 20 மாணவிகள் பயிற்சி பெறுகிறார்கள்.

அண்மையில் இதன் திறப்பு விழா தொழில் அதிகாரி திரு. கே. நடராசா தலைமையில் நடைபெற்றது.

பயிற்சி நிலையத்தை யாழ் உதவி தொழில் ஆணையாளர் திரு. எஸ். [illegible] வைத்தார்.

## நியாயமானது என்கிறது வடபிரதேச தொழிற் சங்க கூட்டுக் குழு

யாழ்ப்பாணம், ஏப். 3

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் யாழ் பட்டணக் கிளையினர் 18.3.86 திகதியிட்ட கடிதமூலம் நியாயமான கோரிக்கைகளை முன் வைத்தனர்.

நிர்வாகம் அக்கோரிக்கைகளுக்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் கோரிக்கைகளை வென்றெடுக்கும் நோக்குடன் 1-4-86 முதல் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

நிர்வாகம் கடைப்பிடித்து வரும் பிடிவாதப் போக்கு கண்டனத்திற்கும் கவலைக்கும் உரியது.

ஆகவே உடனடியாக இக்கோரிக்கைகளை வழங்கி பிரச்சினையை தீர்த்து வைக்கும்படி வேண்டுகின்றோம்.

இவ்வாறு வடபிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக் குழு தெரிவித்துள்ளது.

## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி வைபவம்

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் இயங்கும் இன்ரறக்ற் கழகத்தின் 'பட்டயம் வழங்கும் வைபவம்' ஏப்ரல் 5 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

## வாழ்க்கை நெறியாக சமயம் மலரட்டும்

யாழ்ப்பாணம், ஏப். 3

சமயம் போதனைக்காக மட்டும் அமையாமல் வாழ்க்கை நெறியாக மலரட்டும். இதனையே கந்தபுராணம், பெரிய புராணம் வலியுறுத்தும்.

ஏழாலை சைவ அபிவிருத்திச் சங்கக் கொடி தினவிழாவில் தலைமை உரையாற்றிய திரு. வி. டி. நாவேந்தன் இவ்வாறு கூறினார்.

ஏழாலை சைவ மகாஜன வித்தியாசாலையில் கொடிதினத்தை சங்கத் தலைவர் திரு. சி. சக்திகிரீவன் ஆரம்பித்து வைத்தார்.

## பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 3

இலங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியினால் ஏப்ரல் 7ஆம் திகதி நடத்தப்பட இருந்த டி.ஏ.எம். இறுதிப் பரீட்சை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இக்கல்லூரியை நிர்வகிக்கும் வடஇலங்கை சுதேச வைத்திய சபையுடன் கல்லூரி இறுதியாண்டு மாணவர், பெற்றோர்கள், பெற்றோர் நலன்புரிச்சங்க உறுப்பினர்கள் நடத்திய ஆலோசனை [illegible] பரீட்சை ஒத்திவைக்கும் முடிவு எடுக்கப்பட்டது.

## துவக்கு வெடித்து ஒருவர் காயம்

கிளிநொச்சி, ஏப் 3

நெல் வெட்டச் சென்றவர் கட்டுத் துவக்கு வெடிக்கு இலக்காகி கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

ஒட்டுசுட்டான் சாழப்பை என்ற இடத்தைச் சேர்ந்த அ. நாகராசா (24 வயது) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

## புதிய கட்டடம்

ஊர்காவற்றுறை, ஏப். 3

ஊர்காற்வறுறை பட்டண சபைக்கான புதிய கட்டடம் பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது.

## மீனவர் இளைப்பாற்று மண்டபம்

நாகர்கோயில், ஏப் 3.

நாகர்கோயில் கடற்கரை மீனவர் இளைப்பாற்று மண்டபத்தை யாழ்ப்பாண அபிவிருத்திச்சபை குடத்தனை உப-அலுவலகம் ரூபா35ஆயிரம் செலவில் நிர்மாணித்து வருகிறது.

## 20 ஆண்டுகளுக்குப் பின் சூடானில் தேர்தல்

### பலகட்சிக் கூட்டரசு அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது

லண்டன், ஏப். 2

சூடானில் 20 வருடங்களுக்கு பிறகு பொதுத் தேர்தல் நடக்க இருக்கிறது.

பலகட்சிகளின் கூட்டரசு ஒன்று அங்கு அமைக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

264 ஆசனங்கள் கொண்ட சூடான் ஆட்சி மன்றத் தேர்தல் இம்மாதம் 12 ஆம் திகதி நடைபெறும் எனவும் 16 ஆம் திகதியளவில் இதன் முடிவு தெரிந்துவிடலாம் எனவும் நம்பப்படுகிறது.

எனினும் சூடான் நாட்டின தென்பகுதியைப் பொறுத்த வரையில் அந்தப்பகுதிகளுக்கான தேர்தல் பின் போடப்படும் எனவும் கருதப்படுகிறது.

மக்கள் முகம்

## நிர்வாகிகள்

புங்குடுதீவு, ஏப். 3

புங்குடுதீவில் உள்ள ஊரதீவுக் கிராமத்தில் விழிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டம் சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் தலைமையில் நடைபெற்றபோது குழுவின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. சி. க. நல்லையா, உபதலைவர்: திரு. கா. கந்தசாமி, செயலாளர்: திரு. பா. வரதராசா.

ஒன்பதுபேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## வீடியோ கிளப் உரிமையாளர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 3

வடமாகாண வீடியோ கிளப் உரிமையாளர் சங்கக்கூட்டம் யாழ் எலக்ரோனிக் கொம்பிளெக்ஸில் நடைபெற்றது.

யாழ் வீடியோ கழக உரிமையாளர் எதிர் நோக்கும் பிரச்சினைகள் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: நியூவிக்டர்ஸ் உரிமையாளர், உபதலைவர்: பிரசாத் வீடியோ' செயலாளர்: நல்லூர் வீடியோ, பொருளாளர்: குணம் வீடியோ.

வடமாகாண த்திலுள்ள சகல வீடியோ கழகங்களும் இந்த அமைப்பின்கீழ் இனிச் செயல்படும் என முடிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

பக்தியுடையார் காரியத்திற் பதறார் மிகுந்த பொறுமையுடன் வித்து முளைக்குந் தன்மை போல் மெல்லச் செய்து பயனடைவார்.

- மகாகவி பாரதியார்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, விக்சாரா நிலைய வீதி, யாழ்ப்பாணம்.    03-04-86    தொலைபேசி: 24805, 22073    த. பெ. 28


## கிராம வளம் காண்போம்

மல்லாகம் பகுதியில் உள்ள சில குளங்கள் ஆழமாக்கிப் புனரமைக்கப்பட இருக்கின்றன. மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கமே அந்தப் பணியைச் செய்வதற்குத் தீர்மானித்து உள்ளது தீர்மானம் வெறும் முடிவாக இருக்காமல் செயல் வடிவம் பெறும் என எதிர்பார்க்கிறோம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு இது ஒரு நல்ல முன்மாதிரியாக அமைய வேண்டும்

எமது பகுதிகளில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பெயருக்கு ஏற்றால் போலாவது அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுவது மிகக் குறைவு

ஒரு வாசிகசாலையை உண்டாக்கி நிர்வகித்தல், விளையாட்டுக் கழகங்களை நிறுவி இளைஞரின் விளையாட்டு ஆற்றலை வளர்த்தல். இவ்வாறு சில சில்லறைப் பணிகளோடு தமது கடமை முடிந்து விட்டதாகவே இப்பகுதியில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் நினைக்கிறார்கள்.

அந்தந்தக் கிராமத்தின் விவசாய, கைத்தொழில் அபிவிருத்திகளைச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பும் கி அ. சங்கங்களுக்கு உண்டு. அதனை பல சங்கங்கள் செய்வதில்லை. அபிவிருத்தி என்றால் பெருமளவில் செய்ய வேண்டும் என்பதில்லை

ஒரு பகுதிக்கு 'இன்றியமையாதது — அவசியமானது — அவசரமானது எனக் கருதப்படும் சிறு திட்டமும் அபிவிருத்திப் பணியாகவே கருதப்பட வேண்டும்.

அந்தந்தக் கிராமத்தின் நீர், நில வசதிகளைப் பெருக்கிக் கொள்வது கிராம வளர்ச்சிக்கு இன்றியமையாதது. அவற்றை அரசாங்கம் வழங்கும் நிதி மூலம் செய்யலாம் என்று காத்திருக்கும் காலம் மறைந்து விட்டது.

நமது காலில் நிற்க இனியாவது முயல வேண்டும். எங்கள் தேவைகளை நாமே பூர்த்தி செய்ய வேண்டும். அதற்குக் கிராம மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து உழைப்பது பிரதானம். கோஷ்டிப் பூசல்கள், நிர்வாகப் போட்டிகள் ஆகியன ஒழிக்கப்பட வேண்டும்.

கிராம அபிவிருத்தியில் அக்கறை உள்ளவர்களிடம் கி அ. சங்க நிர்வாகம் ஒப்படைக்கப்பட வேண்டும். உட்பூசல்களை வளர்த்து அந்தச் சங்கங்களைச் செயலற்றவையாக்கக் கூடாது.

யாழ்ப்பாணம் வானம் பார்த்த பூமி. எனினும் குடாநாடு வாழ் மக்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகள். விவசாயத்துக்குப் பெரும் இடைஞ்சலாக இருப்பது நீர் வசதியின்மை.

இந்த நீர்வசதியைப் பெருக்குவதற்காகத்தான் கிராமக் குளங்களை தமிழ் மன்னர்கள் தோண்டுவித்தார்கள். ஆனால் வெள்ளைக்காரன் ஆட்சியில் அவை கைவிடப்பட்டன. குடாநாட்டில் மாரிகாலத்தில் பெய்யும் மழை முழுவதும் கடலில் பாய்ந்து வீணாகி விரயமாகியது ஆனால் கோடையில் விவசாயிகள் தண்ணிருக்காக ஏங்குகிறார்கள்.

தூர்ந்து போன கிராமக் குளங்களை ஆழமாக்கிப் புனரமைத்தால் கோடையில் தண்ணிர்ப் பஞ்சம் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். ஆனால் அதில் அக்கறை காட்டப்படுவது இல்லை.

நாம் இனியும் செயலிழந்து இருக்க முடியாது. எமது மண்ணில் உள்ள வளங்களைச் சரியாகப் பயன்படுத்தவும், வளங்களை அதிகரிக்கவும் இப்போதிருந்தே கருமம் ஆற்றுவது அத்தியாவசியம்.

எமது தாயகத்தின் வளங்களை, இயற்கை அளித்த செல்வங்களை கண்டறிவதிலும், அவற்றைத் தக்கபடி பயன்படுத்துவதிலும் தான் எமது பொருளாதார மீட்சி தங்கி உள்ளது

பொருளாதார மீட்சி கிராம மட்டத்தில் இருந்து தான் கட்டி எழுப்பப்பட வேண்டும். காந்தி அடிகள் கிராம ராஜ்யத்தைக் காண்பதன் மூலம் தான் சுதந்திர ராஜ்யத்தை உருவாக்கலாம் என நம்பினார். செயலளவிலும் காட்டினார்.

தமிழ்ப் பகுதிகளில் சுதேசியம் வளர வேண்டும். உரிமைப் போராட்டத்துடன் பொருளாதாரப் போராட்டமும் அருகருகே— சம காலத்தில் நடந்தாக வேண்டும்.

அப்போது தான் எமது இளைஞர்கள் காணத் துடிக்கும் அரசியல் சுதந்திரம் அர்த்த பூர்வமானதாக இருக்கும். இதனை நம்மவர் ஒவ்வொருவரும் உணர வேண்டும். அதுமட்டுமன்றி அதற்காக உழைக்கவும் வேண்டும்.

# வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் சுயமாக முடிவெடுக்க வேண்டும்

## இனியும் பார்வையாளராக இருக்கமுடியாது என்கிறார் பிரமுகர்

மட்டக்களப்பு, ஏப். 3

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களுக்கு இன்றைய இனப்பிரச்சினையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை ஈடுசெய்யும் நிலையில் ஏனைய பிரதேச முஸ்லிம்கள் இல்லை இந்நிலையில் இனப்பிரச்சினை விவகாரத்தில் வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் சுயமான முடிவு எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு அண்மையில் காத்தான்குடி இஸ்லாமிய கலை, கலாசாரமன்ற பரிசளிப்புவிழாவில் சிறப்புரையாற்றிய கிழக்கிலங்கை முஸ்லிம் மஜ்லிஸ் செயலாளர் நாயகம் அல்ஹாஜ் ஏ அகமத் லெப்பை குறிப்பிட்டார்.

'இனப்பிரச்சினையும் முஸ்லிம்கள் எதிர்காலமும்' என்ற தலைப்பில் அவர் உரையாற்றினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இன்றைய இனப்பிரச்சினையில் ஏற்பட்டிருக்கும் பாரிய தாக்கங்கள் முஸ்லிம் சமூகத்தைஅவர்களது எதிர்காலம்பற்றி பாரதூரமான முடிவுகள் எடுக்கும் நிலைக்குத் தள்ளி உள்ளது.

இனப் பிரச்சினையினால் முஸ்லிம்கள் இருவகைப் பாதிப்புகளை அடைந்துள்ளார்கள்.

வடக்கு—கிழக்கு முஸ்லிம்கள் இனப்பிரச்சினைப் போராட்டத்தில் நேரடியாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

ஏனைய பிரதேச முஸ்லிம்களுக்கு நேரடிப் பாதிப்பு இல்லை என்றாலும் நாட்டில் பொதுவாக ஏற்பட்டுள்ள பரவலான தாக்கங்களினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

சூறாவளி அழிவு ஏற்பட்டபோது ஏனைய பிரதேச முஸ்லிம்கள் விரைந்து வந்து வழங்கிய உதவிபோல் இனப் பிரச்சினை விவகாரத்தில் எமக்கு வழங்கமுடியாது.

ஆனால் தார்மீக ஆதரவு தரக்கூடிய நிலையிலுள்ளார்கள்.

அதுமட்டுமல்ல தமிழருக்குத் தமிழ்நாடு கொடுக்கும் ஆதரவைப் பிறநாட்டு முஸ்லிம்கள் தரமுடியாத நிலையிலுள்ளார்கள்.

இந்நிலையில் கூறப்போனால் இன்று எமக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்களுக்கு முற்று முழுதாக வடக்கு—கிழக்கு முஸ்லிம்களே முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

இதுவரை இனப்பிரச்சினையை தமிழ் - சிங்கள பிரச்சினை எனக்கருதிமுஸ்லிம்கள் பார்வையாளர்களாக இருந்தனர்.

ஆனால் இன்று அப்படி இருக்கமுடியாது. நேரடிப்பங்காளர்களாக மாற வேண்டியுள்ளது.

இந்நிலையில்தான் வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் இவ்விவகாரத்தில் சுயமான முடிவுகளை எடுக்க வேண்டுமென்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

அரசு - தமிழ்ப் போராளிகள் தமது ஆயுத போராட்டத்தைக் கைவிடவேண்டும். அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். ஆயுத தீர்வு நிரந்தர தீர்வாக அமைந்த வரலாறு இல்லை.

இனப் பிரச்சினைக்கு முஸ்லிம்கள் மாற்றுத் திட்டம் எதுவும் வைக்கவில்லையென்ற பேச்சுக்கு இடம் வரக்கூடாதென்பதற்காகவே அண்மையில் கிழக்குமாகாண முஸ்லிம்கள் மாநாட்டில் இவப் பிரச்சினையை ஆராய்ந்து வடக்கு கிழக்கு பகுதியில் தமிழ்-சிங்கள - முஸ்லிம் தனித்தனி சபைகள் அமைக்கும் ஆலோசனையை அரசுக்கு முன் வைத்தோம்.

வடக்கு- கிழக்கு இணைப்பு இல்லை என்ற அரசின் பிடிவாதம், வடக்கு - கிழக்கு இணையாத எந்தத் தீர்வும் வேண்டாமென்ற தமிழ் மக்களின் கோரிக்கை ஆகியவற்றிற்கு இதனால் முற்றுப் புள்ளிவைக்கலாம்.

இப்படி அவர் கூறினார்.

# சாரணர் இயக்கத்தின் முக்கியத்துவம் குறித்து கல்விப் பணிப்பாளர்

வட்டுக்கோட்டை, ஏப் 3

சிவில் நிர்வாகம் இல்லாத இக் காலகட்டத்தில் சாரணர் இயக்கம் யாழ். மாவட்டம் முழுவதும் செயற்பட வேண்டும்.

அகில இலங்கை சாரணர் சங்க காங்கேசன் துறை மாவட்டக்கிளையின் கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

மாவட்ட ஆணையாளர் திரு. ஆர். விசுவநாதன் தலைமையில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் இக் கருத்தரங்கு நடைபெற்றது.

பிரதம விருந்தினர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

தெல்லிப்பளை ப. நோ கூ. சங்கத்தலைவர் திரு. சி. சிவமகாராசா, காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்தனர்.

யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை மாவட்ட சுகாதார அதிகாரி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை ஆகியோர் கொடியேற்றி வைத்தனர்.

மாவட்ட சாரணர் சங்கச் செயலாளர் திரு. கே. சிவானந்தம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் சங்கத் தலைவர் திரு. ஏ. மகாதேவன், திருமதி. ஆர். ச. இராஜநாயகம், உதவி மாவட்ட ஆணையாளர் திரு. ந. போஜன் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர். வைத்தியகலாநிதி சுகந்தன் இன்னசித்தம்பியும் வைபவத்தில் கலந்து கொண்டார்.

# கிராம அபிவிருத்திக்கு உழைப்பேன்

## நிர்வாக உத்தியோகத்தர் உரை

மண்டைதீவு,ஏப்ரல். 3

கிராம மக்களின் தேவைகளை பெற்றுக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் கிராமத்தின் அபிவிருத்திக்காகவும் அயராது உழைப்பேன்.

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் மண்டைதீவு உபஅலுவலகத்துக்கு இடமாற்றம் பெற்று வந்த நிர்வாக உத்தியோகத்தர் திரு டி. பூபாலரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

அலுவலக உத்தியோகத்தர்கள் மத்தியில் அவர் மேலும் பேசும் போது;

ஒரு கிராமம் பகுத்தறிவுள்ள கிராமமாக மாற வேண்டுமானால் அப்பகுதியிலுள்ள நூல்நிலையங்கள் திறம்பட சேவை செய்ய வேண்டும்.

மண்டைதீவு பொது நூல்நிலையத்திற்கு இவ்வாண்டு புதிய நூல்கள் கொள்வனவு செய்வதற்கு பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிந்தேன்.

எனது முதல் வேலையாக இப்புதிய நூல்களை கொள்முதல் செய்து இப்பகுதி வாசகர்களின் தேவையை பூர்த்தி செய்வதேயாகும்.

இப்படி அவர் கூறினார்.

# இளைஞர் அபிலாஷைகளுக்கு பதில்தரக் கூடியவர் சுவாமி விவேகானந்தர்

யாழ்ப்பாணம், ஏப். 3

இன்றைய இளைஞரின் அபிலாஷைகளுக்கு பதில் தரக்கூடிய தத்துவ ஞானி சுவாமி விவேகானந்தர்.

இப்படி சுவாமி சித்ரூபானந்தா சொன்னார்.

ஸ்ரீராமகிருஷ்ண விவேகானந்த மாநாடு, ஸ்ரீராமகிருஷ்ணரின் 151 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி பருத்தித்துறை ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் அண்மையில் நடைபெற்றது

ராமகிருஷ்ணாலய பக்தர்களின் பஜனையை அடுத்து சுவாமி சித்ரூபானந்தா பேசினார்.

சுவாமி சித்ரூபானந்தா மேலும் சொன்னதாவது;

ராமகிருஷ்ண — விவேகானந்த அலை— இன்று உலகெங்கும் வீசுகிறது.

தைரியம் உள்ளவர்கள், சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

"நான் கட்டி எழுப்பவே வந்தேன் ஒன்றையும் அழிக்க வரவில்லை எனக்கு வீர இளைஞர்கள் வேண்டும்" என்று அறைகூவல் விடுத்தவர் சுவாமி விவேகானந்தர்.

ஏழைகளிடத்தில் இறைவனைக் காணுங்கள். இது தவிர வேறு தெய்வமே இல்லை என்றவர் சுவாமி விவேகானந்தர்.

இப்படி சுவாமி சித்ரூபானந்தா சொன்னார்.

# உணவு முத்திரை 'பி' படிவம் விநியோகம்

வல்வெட்டித்துறை ஏப் 3

வல்வெட்டித்துறைப் பகுதியில் வாழும் 700 ரூபாவுக்கு குறைந்த வருமானமுள்ளவர்களுக்கான உணவு முத்திரை வழங்குவதற்கான 'பி' படிவங்கள் கிராம சேவையாளர்களினால் வழங்கப்பட்டு வருகின்றன.

[illegible]

# இந்துமத போதனை வாழ்வுக்கு உகந்தது

## கோளறு பதிகம் வெளியீட்டில் உரை

பலாலி, ஏப்ரல் 3

'இந்துமதம் எமக்குப் போதிப்பதெல்லாம் எமது வாழ்வுக்கு மிகவும் பொருத்தமானதாகவுள்ளது. இந்துமதத்தின் சடங்குகள் சம்பிரதாயங்கள், புராண - இதிகாசக் கதைகள் யாவும் அர்த்தமுள்ளன. இதனாலேயே எமது மதம் இன்றும் இளமையாக - முதுமையாக மிளிர்ந்துகொண்டு இருக்கின்றது.

அச்சுவேலிஇடைக்காடு இந்து நெறிக்கழகம் இலவசமாக மாணவர்களுக்கு தனது 2 ஆவது வெளியீடான 'கோளறு பதிகம்' வழங்கியது.

இது தொடர்பான வைபவம் கட்டுவன்புலம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

விழாவில் உரையாற்றிய, கழகத்தலைவர் திரு. ச க. ஆறுமுகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# கவி பாரதி சனசமூக நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப்3

சோலைபுரம் கவி பாரதி சனசமூக நிலையத் திறப்பு விழா ஏப்ரல் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறும்.

# விசர் நாய் ஆபத்து

பருத்தித்துறை, ஏப். 3

வடமராட்சிப் பகுதியில் நாய்களுக்கு விசர் வரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இப்பகுதி நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படுகிறது.

# பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான சம்பளம் இன்னும் இல்லை


தாளையடி, ஏப்ரல். 3

ஆசிரிய கலாசாலையில் பயிற்சி முடிந்து வெளியேறிய பல தமிழ் ஆசிரியர்களுக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான சம்பள உயர்ச்சிகள் பல ஆண்டுகளாக வழங்கப்படாமலிருக்கின்றன.

இவர்களின் சுயவிவரக்கோவை இவர்கள் பயிற்சிக்கு முன் கடமையாற்றிய மாவட்டங்களிலுள்ள பிராந்திய கல்வி அலுவலகங்களிலிருந்து அனுப்பப்படாததே இதற்குக் காரணம் ஆகும்.

இந்த ஆசிரியர்கள் தற்போது கடமையாற்றும் மாவட்டங்களிலுள்ள பிராந்திய கல்வி அலுவலகங்களுக்கு இவை அனுப்பப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரிய பயிற்சியின் முன் மலையகத்தில் கடமையாற்றி, பயிற்சியின் பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் பலரே இந்நிலைக்கு உள்ளாகி இருக்கின்றனர்.



## பொய்யாமொழி

குறள்:

கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

பொருள்:

நடுவுநிலையாக நின்று அறநெறியில் நிலைத்து வாழ்கின்றவன் அடைந்த வறுமை நிலையைக் கேடு என்று கொள்ளாது உலகம்.

# கிளிநொச்சியில் உள்ள இந்திய வம்சாவழியினருக்கு பிரஜாவுரிமை

உருத்திரபுரம், ஏப். 3

கிளிநொச்சியில் வாழும் பிரஜாவுரிமை அற்ற இந்திய வம்சாவழி மக்களுக்குபிரஜாவுரிமை வழங்குவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன பிரஜாவுரிமை இல்லாதிருக்கும் மக்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு பிரஜாவுரிமை பெற்றுக்கொடுக்க ஒவ்வொரு கிராம அபிவிருத்திச் சங்கமும் முன்வர வேண்டும்.

ஜெயந்திநகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தேர்தலில் கலந்து கொண்ட கிளிநொச்சி கிராம சேவையாளர் திரு எஸ். தனபாலாசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி தேர்தல் ஜெயந்திநகர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் அதன் தலைவர் திரு. பிரான்சிஸ்சேவியர் (குமார்) தலைமையில் நடைபெற்றது.

கிராம சேவையாளர் தனபாலசிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

பிரஜாவுரிமை வேலைகளும், உணவு முத்திரை வேலைகளும்கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற மக்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு உணவு முத்திரைகளைப் பெற்றுக் கொடுக்கும் பணியில் ஈடுபட கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும் - இப்படிஅவர் கூறினார்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் ஆளணி முகாமையாளர் திரு. கு தங்கராசா கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் தலைவர் திரு. ரி எஸ். தர்மசிங்கம் திரு.ஜெயேந்திரா உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

# கலை, கலாசார அறிவை மேம்படுத்த வேண்டும்

## பரிசளிப்பு விழாவில் உரை

பருத்தித்துறை, ஏப். 3

கிராம மக்களின் மத்தியில் தமிழ், கலை, கலாசார பாரம்பரியங்கள் பற்றிய அறிவை மேம்படுத்த வேண்டும். தமிழ் கலை, கலாசாரங்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படும் போது தான் தமிழ் மக்கள் எதிர்காலத்தில் தனித்துவம் வாய்ந்த கலாசார மேம்பாடு கொண்ட சிறந்த வாழ்க்கையை அமைக்க முடியும்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு அ.சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.

தும்பளை அருள்மிகு நெல்லண்டைப் பத்திரகாளி அம்பாள் ஆலய பரிபாலன சபையால் நடத்தப்பட்ட மகாபாரத உபந்நியாசப் போட்டி பரிசளிப்பு விழாவில் பேராசிரியர் அ சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பரிசளிப்பு விழா ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு.சி.மு.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை சிவாகம கிரியா கிரமஜோதி சிவஸ்ரீ. வ. வே. நவரத்தினக் குருக்கள் வழங்கினார்.

பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் திரு. சி. சிவஞானசுந்தரம், திரு. எஸ். சிவபுண்ணியம் உட்பட பலர் உரையாற்றினர்.

ஆலய முகாமையாளர் திரு.எஸ். பாலசுந்தரம் நன்றியுரை வழங்கினார்.

# பொங்கல் உற்சவம்

கிளிநொச்சி, ஏப்.3

வன்னிப் பிரதேசத்தின் முக்கிய தலமான புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் மிகவும் அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது.

# யாழ் மாவட்ட முக்கிய பிரச்சினை ஆசிரியர் பற்றுக்குறை

பலாலி, ஏப் 3

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கின்ற கல்விப் பிரச்சினைகளில் ஆசிரியர் பற்றுக்குறை முதலாவது இடத்தை வகிக்கிறது.

யாழ். கல்விப்பணிப்பாளர் திரு சுந்தரலிங்கம் காங்கேசன்துறை கல்வி வட்டார ஆசிரியர்களைச் சந்தித்து உரையாடியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ் உரையாடல் நிகழ்ச்சியில் மேலும் அவர் கூறுகையில்,

யாழ். மாவட்டத்துக்கு தற்போது சுமார் 3000 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றார்கள். வருகின்ற தவணை மிகக் குறைந்தளவு ஆசிரியர்களே எமது மாவட்டத்துக்கு மாற்றலாகி வரவுள்ளனர்.

இவர்களை மட்டும் வைத்துக் கொண்டு ஆசிரியர் பற்றுக்குறையை நாம் தீர்த்து வைக்க முடியாது.

இதனை அமைச்சுக்கு விளக்க, யாழ் மாவட்ட அதிபர்கள் சங்கத்துடன் நாம் அமைச்சுக்குச் செல்ல விருக்கின்றோம் என்றார்.

காங்கேசன்துறை கல்வி வட்டாரப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் பற்றுக்குறைபற்றி வட்டார அதிபர்கள் கேட்டபோதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பளையில் பேடன் பவல் தினம்

யாழ்ப்பாணம், ஏப். 3

பளை மகா வித்தியாலயத்தில் சாரண இயக்கத் தந்தை பேடன் பவல் தினம் அண்மையில் கொண்டாடப்பட்டது

கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு.ஏ.பி. செல்லையா தலைமை வகித்தார்.

கிளிநொச்சி மாவட்ட ஆணையாளர் தி. கோபாலகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பேடன் பவல் பேச்சுப் போட்டிகளில் பரிசு பெற்றவர்கள் வருமாறு;

குருளைச் சாரணர்: செ. யசோதரன் (எழுதுமட்டுவாள் அ.த.க.பாடசாலை) கனிஷ்ட சாரணர்: ம. இந்துவாசன் (பளை மகா வித்தியாலயம்) சிரேஷ்ட சாரணர்: கு. குணராபன் (பளை மகா வித்தியாலயம் பெண்கள் சாரணியர்: க. ஜெயலட்சுமி, (பளை மகா வித்தியாலயம்) சித்திரப் போட்டி: செ. யேசுராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெலிபோன் வாங்க
ரெலிகுளோப்
இரவு பகல் 24 மணி சேவை
ரெலிபோன்: 25088 (ஆறு தொடர்புகள்)

உதயன்

03. 04. 1986 வியாழக்கிழமை

ரெலிபோன் பேச
ரெலிகுளோப்
இரவு பகல் 24 மணி சேவை
ரெலிபோன்: 25088 (ஆறு தொடர்புகள்)

# கிளிநொச்சியில் பெரும்பதற்றம்

கிளிநொச்சி, ஏப். 3

நேற்றுக் காலை கொக்காவில் பகுதியில் நிகழ்ந்த கண்ணிவெடித் தாக்குதல், அதையடுத்து நடந்த நேரடி மோதல் ஆகியவற்றினால் கிளிநொச்சியில் பெரும் பதற்றம் நிலவியது.

கிளிநொச்சிப் பகுதியிலும் ஆங்காங்கே துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் குண்டுச் சத்தங்களும் கேட்டன.

கிளிநொச்சிப் பகுதியூடான வாகனப்போக்குவரத்து அனைத்தும் துண்டிக்கப்பட்டன. கிளிநொச்சிக்குத் தெற்கே வாகனப் போக்குவரத்து ஏதும் இருக்கவில்லை.

வெளிவாரிப் பட்டப் படிப்பு பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தனிப்பட்ட பஸ்ஸில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த சுமார் 120 பரீட்சார்த்திகளும் கிளிநொச்சியுடன் வந்த வழியே திரும்பினார்கள்.

நேற்று நண்பகல் சுமார் பதினொன்றரை மணியளவில் கிளிநொச்சி இராணுவ முகாமுக்குள் இரண்டு பாரிய குண்டுச் சத்தங்கள் கேட்டன.

இதனைத் தொடர்ந்து நகரில் பொதுமக்கள் சிதறி ஓடினர். கடைகள் பூட்டப்பட்டன. நகர் வெறிச்சோடியது. மக்கள் பீதியால் கிராமப் புறங்களை நாடினர்.

இதனையடுத்து பாடசாலைகளும் நேரகாலத்தோடு மூடப்பட்டன.

## டானியல் அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப் 3

மறைந்த பிரபல எழுத்தாளர் திரு. கே. டானியல் அஞ்சலிக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமை வகிப்பார்.

## மட்டுநகர் கிரனேட் வீச்சு மரணங்கள்

# எதிரிகள் என்று எமக்கு எவருமில்லை

## ஹோட்டல் உரிமையாளரின் மனைவி மாலினி சாட்சியம்

மட்டக்களப்பு, ஏப்.3

மட்டக்களப்பு நகரில் கிரனேட் தாக்குதலில் இறந்த மூன்று பேரின் மரண விசாரணைகளும் நேற்று நடந்தன.

இறந்த ஹோட்டல் உரிமையாளர் ராஜபக்ஷவின் மனைவியான திருமதி மாலினி ஆரியலதா (36 வயது) சாட்சியமளிக்கையில்.

எதிரிகள் என்று எமக்கு எவரும் இல்லை. இச்செயலை யார் செய்தார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை — என்று சொன்னார்.

மட்டக்களப்பு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் 3 மரணங்களையும் கொலைச் சம்பவங்கள் என்று தீர்ப்பு வழங்கினார்

## டென்மார்க்

டென்மார்க் பயணத்துக்கான சகல ஒழுங்குகளும் செய்து தரப்படும். எதிர்வரும் ஏப்பிரல் 15 ம் திகதி கோஷ்டி பயணமாகின்றது. உங்கள் பாஸ்போட்டுடன் நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.

Manpower & Travel Consultant
533, Stanley Road,
JAFFNA.

## நீத்தார் பட்டியல்

### S. S நாதன்

### (செ. சர்வசண்முகநாதன்)

இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்
(வவுனியா)

S. S நாதன் 02-04-86 புதன்கிழமை காலை காலமானார்.

இவர் காலஞ் சென்ற திரு. திருமதி வே. செல்லத்துரை தம்பதிகளின் மூத்த புதல்வரும் சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கதிர் செல்வன் (சவூதி), வனதா, பவஅனுஜா, லலிதா, நிதிநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரநாதன் (புகையிரதப் பகுதி), லிங்ககுரு (அம்பாறை-ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம்) நரேந்திரநாதன் (உதயன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று (3.4.86) காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வட்டுக்கோட்டை கொற்றத்துறை மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

கண்ணகை அம்மன் கோயிலடி,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நஷப்ரூடமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட்,207 ,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 03-04-1986
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number QJ60 N 86

# இந்தியாவில் பத்திரிகைகள் இன்று இல்லை

புதுடில்லி, ஏப். 2

இந்தியாவில் வியாழக்கிழமை (3ஆம் திகதி) செய்திப் பத்திரிகைகள் வெளிவரமாட்டா.

சம்பள அதிகரிப்புக் கோரி செய்தி ஸ்தாபனங்கள் பத்திரிகை நிறுவனங்களைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் புதன்கிழமை புதுடில்லியில் பேரணி ஒன்றை நடத்தினர்.

இது சம்பந்தமாக டில்லி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. மதுதண்டவதே பேசுகையில்,-

பத்திரிகையாளர்களின் பேரணி காரணமாக வியாழன் இந்தியாவில் செய்திப் பத்திரிகைகள் வெளிவரமாட்டா — என்று குறிப்பிட்டார்.

## வல்வெட்டித் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி வந்தன.

இத்தாக்குதல்களினால், இப்பகுதியைச் சேர்ந்த பரமசிவம் (35 வயது), மணியம் (42 வயது), நல்லதம்பி மணி (40 வயது), சிவகுரு ரெத்தினம் (42 வயது) ஆகியோர் காயமடைந்தனர். இன்னும் சிலர் சிறுகாயமடைந்தனர்.

நடுநிசியில் நடந்த இப் பயங்கரத்தினால் பொதுமக்கள் அயலிலுள்ள சிவன்கோயில், முத்துமாரி அம்மன் கோயில் ஆகியவற்றில் தஞ்சம் அடைந்தனர்.

அதிகாலை சுமார் 3-30 மணி அளவில் வேட்டுச் சத்தங்கள் அடங்கின.

காலை சுமார் 6-30 மணியளவில் விமானம் ஒன்று தாழப்பறந்து இப் பகுதியை வட்டமிட்ட போது மக்கள் மீண்டும் பீதி அடைந்தனர்.

## ஷெல் தாக்கு . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மரணமானார்,

மார்க்கண்டு பரமேஸ்வரி (35 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்.

கடந்த 21ஆம் திகதி யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் இவர் காயமடைந்திருந்தார்.

இவர் கொட்டடியைச் சேர்ந்தவர்.

இவரது மரண விசாரணையை யாழ் மரண விசாரணை அதிகாரி க. கேசவன் நடத்தினார்.

## கொக்காவிலில் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரியில் சேர்க்கப்பட்ட சிப்பாய்களில் சிலரின் நிலை மோசமடைந்ததால் அவர்கள் பின்னர் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு அவசர அவசரமாக விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டனர்.

# சீக்கிய தீவிரவாதிகள் பாகிஸ்தானுடன் தொடர்பு

புதுடில்லி, ஏப். 2

சீக்கியத் தீவிரவாதிகளுடன் பாகிஸ்தானுக்குத் தொடர்பு உண்டு. இதை பாகிஸ்தானின் ஒரு பகைமைச் செயலாகக் கருதுகின்றோம்.

இப்படி உள்துறை ஸ்டேட் அமைச்சர் திரு. கே. அருண்நேரு, இந்திய நாடாளுமன்றத்தில் சொன்னார்.

கைது செய்யப்பட்ட சுமார் 20 சீக்கியத் தீவிரவாதிகள் பாகிஸ்தானுடன் தொடர்வைத்து இருந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன என்றும் திரு அருண்நேரு சொன்னார்,

சீக்கியத் தீவிரவாதிகளுக்கும் பாகிஸ்தானுக்கும் உள்ள தொடர்பு குறித்து பாகிஸ்தானுடன் நேரடியாகப் பேச வெளியுறவு அமைச்சுக்கு அறிவித்துள்ளோம் என்றும் திரு. அருண் நேரு சொன்னார்.

## சோதனைக்குழாய் மூலம் 5 குழந்தைகள்

லண்டன், ஏப் 2

சோதனைக் குழாய் மூலம் குழந்தை பிறப்பது உலக விஞ்ஞான சாதனை.

அச்சாதனையிலும் ஒரு சாதனை. ஒரேதரத்தில் ஐந்து குழந்தைகளை சோதனைக் குழாய் மூலம் கருத்தரித்த ஒரு தாய் பெற்றெடுத்தார்.

சீசேரியன் சத்திர சிகிச்சை மூலம் குழந்தைகள் பிறந்தன.

லண்டன் ஆஸ்பத்திரியில் 33 வயதான ஆசிரியை ஒருவரே சோதனைக் குழாய் மூலம் 5 குழந்தைகளை, அதுவும் ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்தவர் ஆவார்.

## வேலை நிறுத்தம் தொடர்கிறது

நல்லூர், ஏப். 3

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்நேற்று மூன்றாவது நாளாக ஸ்தம்பித நிலையை அடைந்தது.

## தொழிற்சங்க கோரிக்கைகளை வழங்குவதற்கு இணக்கமாம்

யாழ்ப்பாணம், ஏப்.3

யாழ். மாநகரபல நோக்குக் கூட்டுறவு ஊழியர் சங்கத்தின் முக்கிய கோரிக்கைகளை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டதாக அறிய வருகிறது.

102 ரூபா சம்பள உயர்வை ஜனவரி மாதத்தில் இருந்தும் 56ரூபா சம்பள உயர்வை ஜூன் மாதத்தில் இருந்தும் வழங்குவதற்கு நிர்வாகத்தை இணங்க வைப்பதில் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும் சொல்லப்பட்டது

திரு மனோகரன் விடயத்திலும் ஒரு சுமுகமான முடிவுக்கு வர நிர்வாகம் இணங்கியதாகவும் அறிய வந்தது.

# சேந்தான்குளம். . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் வெள்ளைநிற வான் ஒன்றை கறுப்பு நிற ஹெலிகொப்டர் சுட்டது.

வானைநோக்கி ஷெல் ஒன்றும் வீசப்பட்டது. வானில் இருந்த விநோகரன் என்ற 22 வயது இளைஞர் ஒருவர் காயமடைந்து பின்பு மரணமானார்.

தொடர்ந்துஇளவாலை, விளான், கருகம்பானைப் பகுதிகளில் பரவலாகச் சுட்ட ஹெலிக்கொப்டர் ஒருமணிநேரத்தின் பின்பு பலாலிக்குத்திரும்ப மற்ற ஹெலிக்கொப்டர் காபர் வியூ ஹோட்டல் பக்கம் சென்றது.

இதைத் தொடர்ந்து சேந்தான்குளம் கடற்பாதையால் வந்த கடற்படையினர் வான் நின்ற இடத்தைநோக்கி பீரங்கியால் சுட்டனர்.

சேதமுற்ற வானைப் பார்த்துக்கொண்டிருந்த நால்வர் காயமடைந்தனர்.

இச்சம்பவங்களின் போது கீரிமலைக்கும் சேந்தான்குளத்துக்கும் இடையிலுள்ள வசந்தபுரம் என்ற இடத்தில் 'ஷெல்' தாக்குதலினால் இன்னுமொருவர் மரணமானார் என்று கூறப்படுகிறது.

### புகை மண்டலம்

இச்சம்பவங்களின் போது 'ஷெல்' வீச்சினால் ஆலைவிழுந்தான் பிள்ளையார் கோயில் பகுதி புகைமண்டலமாகக் காட்சி அளித்தது.

'ஷெல்' தாக்குதலால் சிலவீடுகள் எரிந்தன.

இளவாலை மெய்கண்டான் பாடசாலையினைச் சுற்றி ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றைய சம்பவங்களில் இறந்த மற்றும் ஒருவர் கணபதிப்பிள்ளை அருளானந்தம்.

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் காயங்களுடன் மூன்றுபேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அளவெட்டி அம்பாள் 'கிறேசர்' தொழிற்சாலை, இளவாலை பத்தாவத்தை இந்து வித்தியாலயம் உட்பட 15 இற்கு மேற் பட்ட வீடுகள் சேதம் அடைந்தன.

# "ஒரு தேசிய அறிவியலின் தேவை"

யாழ்ப்பாணம், ஏப் 3

'ஒரு தேசிய அறிவியலின் தேவை' என்ற தலைப்பில் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை யாழ் பல்கலைக் கழக மாணவர் பொதுமண்டபத்தில் நடைபெறும்.

அரசியல், பொருளாதாரம், இராணுவம், கலாசாரம், விஞ்ஞானம், புவியியல், சமூகம் ஆகிய தலைப்புகளில் கலந்துரையாடல் நடைபெற உள்ளது.

யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் இக்கலந்துரையாடலை ஒழுங்கு செய்துள்ளனர்.

## மோட்டார் சைக்கிளுடன் இருவர் கைது!

கல்முனை, ஏப். 3

அக்கரைப்பற்று நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரண்டு தமிழ் இளைஞர்களை அதிரடிப் பொலீஸார் வழி மறித்துப் பிடித்தனர்.

இளைஞர்களையும் மோட்டார் சைக்கிளையும் பொலீஸார் தடுப்பு முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

## பறங்கி இளைஞரும் கைது!

கல்முனை, ஏப். 3

கல்முனை நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை பகல் சைக்கிளில் வந்து கொண்டிருந்த 18 வயதான பறங்கி இளைஞர் ஒருவரை ஊர்காவல் படையினர் பிடித்து பொலீஸ் அதிரடிப் படையினரிடம் ஒப்படைத்தனர்.

எரிஸ் அவுட்ஸ்கணர் என்ற பெயருடைய இந்த இளைஞர், களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## விளையாட்டரங்கு

# கிறுஸ்கொப்பர்ஸ் அணி ஐந்து விக்கெட்டுக்களினால் வெற்றி!

## சேரமான் 'செஞ்சுரி' அடித்தார்

யாழ்ப்பாணம், ஏப். 3

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் ஆட்டத்தில் தெல்லிப்பளை கிறுஸ்கொப்பர்ஸ் அணி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியை ஐந்து விக்கெட்டுக்களினால் தோற்கடித்தது.

தோல்வியடைந்த பல்கலைக்கழக அணியின் தரப்பில் எம். வி. சேரமான் அபாரமாகத் துடுப்பெடுத்தாடி 'செஞ்சுரி' ஒன்றை அடித்தார்.

இந்த ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

50 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் அடிப்படையில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ் பல்கலைக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

41 ஓவர்களில் 235 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பல்கலைக்கழக அணி தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

எம். வி. சேரமான் 101, ஆர். மகிந்தா 40, ஆர். ரகுராகவன் 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

முரளி, ராஜஸ்ரீ ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்கள்.

அடுத்துத் துடுப்பெடுத்தாடிய கிறுஸ்கொப்பர்ஸ் அணி 47 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 236 ஓட்டங்களைப் பெற்ற ஆட்டத்தில் வெற்றி பெற்றது.

ரவீந்திரன் 51, முரளிதரன் 41, சங்கரன் 41, பத்மநாதன் 30, ராஜஸ்ரீ 30 ஓட்டங்களைப் பெற்றனர்.

மிலானியஸ் 2 விக்கெட்டுக்களையும், சசிதரன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்கள்.

# இறுதியாட்டம்

## 'கலை ஒளி' கிண்ணத்திற்கு

யாழ்ப்பாணம், ஏப். 3

இணுவில் கலை ஒளி மன்றம் 'கலை ஒளி' வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தும் 7 பேர் கொண்ட 'நொக் அவுட்' முறையிலான உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இறுதியாட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக நீல அணியை எதிர்த்து சுன்னாகம், மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகம் மோதும்.

இந்த ஆட்டம் இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

# யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர் அணி வெற்றி!

யாழ்ப்பாணம் ஏப்.3

யாழ் . இந்துக்கல்லூரி ஆசிரியர் அணிக்கும் யாழ். பெரியாஸ்பத்திரி டாக்டர் அணிக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் ஆட்டத்தில் இந்துக் கல்லூரி ஆசிரியர் அணி 26 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

யாழ். இந்து மைதானத்தில் மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர்கள் அடிப்படையில் இந்த ஆட்டம் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கல்லூரி ஆசிரியர் குழு 10 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 111 ஓட்டங்களைப் பெற்றது.

இக் குழுவின் சார்பில் ஆடிய ரி. சிவகுமாரன் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும், எம். சிவரூபன் 26 ஓட்டங்களையும், எஸ். புண்ணியலிங்கம், ஆர். இரத்தினசபாபதி ஆகியோர் தலா 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

டாக்டர் ஜெயச்சந்திரன் 8 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ் வைத்தியசாலை டாக்டர்கள் அணி 85 ஓட்டங்களை மட்டும் பெற்று ஆட்டமிழந்தது.

இந்த அணியைச் சேர்ந்த சிவகுமாரன் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும் ஜெயச்சந்திரன் 13 ஓட்டங்களையும், சிறீபதி 8 ஓட்டங்களையும்பெற்றனர்.

யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள் அணியைச் சேர்ந்த ரி. சிவகுமாரன் 5ஓட்டங்களைக்கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், ஆர். இரத்தினசபாபதி 4 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

நடுவர்களாக திரு. பூபாலசிங்கம் திரு. சண. ஹிட்லர் ஆகியோர் கடமை புரிந்தனர்.

இப்போட்டிக்கான ஒழுங்குகளை யாழ்இந்துக் கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. என். சோமசுந்தரம் மேற்கொண்டிருந்தார்.

# ஈழத்து இலக்கிய வரலாறு தொய்ந்து காணப்படுகிறது

## பேராசிரியர் வேலுப்பிள்ளை கவலை

யாழ்ப்பாணம், ஏப். 3

நீண்டகால வளம் வாய்ந்த இலக்கிய பாரம்பரியம் நமக்குள்ள போதிலும், ஈழத்து இலக்கிய வரலாறு தொய்ந்து காணப்படுகிறது.

யாழ் பல்கலைக் கழக புலமை நிகழ்ச்சியின் எட்டாவது தொடர் சொற்பொழிவை கைலாசபதி கலையரங்கில் தமிழ் துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை நிகழ்த்தியபோது இவ்வாறு குறிப்பிட்டார்.

துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமை வகித்தார். பேராசிரியர் வேலுப்பிள்ளை தொடர்ந்து கூறியதாவது:-

ஈழத்துத்தமிழ் இலக்கிய வரலாறு சம்பந்தமாகப் பூரணமான நூல் எதுவும் இல்லை. அண்மையில் தான் பல்கலைக்கழக மட்டத்தில் இதுபற்றிய ஆய்வுகள் தொடங்கப்பெற்றன.

இந்துவெளி நாகரிக காலத்துக்கு முந்தியவர்கள் திராவிடர்கள் என்ற கருத்து நிலை உறுதிவடிவு பெறுகிறது. திராவிட மொழிகள் சமஸ்கிருதத்துக்குக் கடன் கொடுத்து உள்ளன.

ஈழத்துப் பூதந் தேவனார் உண்மையில் ஈழத்தவரா என்ற சர்ச்சை ஏற்பட்டுள்ளது ஈழத்து என்ற அடைமொழி காரணமாக மட்டும் அந்தப் புலவரை ஈழநாட்டவர் ஆகக்கருத முடியாது என்று வாதம் செய்வாரும் உளர்.

இவர்கள் சில உண்மைகளை மறந்து விடுகிறார்கள். ஈழத்தில் அப்புலவனார் பிறந்து வாழ்ந்த பதிவுகளைத் தேடிப் பிடிப்பது சாத்தியமானதா? நடேசபிள்ளை போன்ற தமிழ் அறிஞர்கள் அவரை ஈழத்தவராக ஏற்றுள்ளனர். பூதன் என்ற சொல் நமது பகுதிகளில் காணப்படுவதாகவும் கூறுவர்.

கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். பாலகிருஷ்ணன் நன்றி கூறினார்.

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ் மாவட்ட சமூக அபிவிருத்திக் கழகத்தின் 4ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மாலை 4 மணிக்கு திரு. மா. கந்தசாமி தலைமையில் நடைபெறும்.

கழகச் செயலாளர் திரு. வீ. இராஜதுரை இதனைத் தெரிவித்தார்.

## மின்சார விநியோகம்

வட்டுக்கோட்டை, ஏப் 3

நவாலி மேற்கு சனசமூக நிலையம் கடந்த பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு அதன் முதல் வேலையாக 65 ஆயிரம் ரூபா செலவில் நவாலி-சங்கரத்தை வீதிக்கு மின்சார விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

சங்கத் தலைவர், செயலாளர் முதலானோரின் பெருமுயற்சியால் இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது போன்ற அவசிய தேவைகளைச் சுட்டிக்காட்டி இக்கிராமத்திற்கு நன்மை புரிய இச்சங்கம் தீர்மானித்திருப்பது குறித்து இப்பகுதி மக்கள் பாராட்டுகின்றனர்.

## 19 பேர் பலி!

பங்களாதேஷில் கடும் சூறாவளி காரணமாக வீடுகள் இடிந்து விழுந்ததில் 19 பேர் கொல்லப்பட்டனர். 200 பேர் காயமடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org